செய்தி வெளியீட்டு எண்: 969 **15.12.2009**

# செய்தி வெளியீடு

## மண்ணச்சநல்லூர் அருகில் தனியார் அரிசி ஆலை சுவர் இடிந்து இறந்த 4 தொழிலாளர்கள் காயமடைந்த 5 தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு நிவாரண உதவி

## முதலமைச்சர் கலைஞர் ஆணை.

**திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், தீராம்பாளையம் மஜரா பலையூர் கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் அரிசி ஆலை கட்டடத்தின் ஒரு பகுதி சுவர் இடிந்து விழுந்த விபத்தில், கோபுரப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திருமதி விஜயா, திருமதி புஷ்பவள்ளி, திருமதி ராஜலட்சுமி, பலையூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி மேகலா ஆகிய நான்கு பேரும் உயிரிழந்தனர்.**

**ராணி, வசந்தா, மகாமுனி, அன்னகாமு, சேகர் ஆகிய ஐந்து பேரும் காயமடைந்து திருச்சி அரசு தலைமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள்.**

**இத்துயர சம்பவம் குறித்த தகவல் கிடைத்ததும், மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்து, உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளதுடன், உயிரிழந்த 4 பேரின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் 2 இலட்ச ரூபாயும், காயமடைந்த 5 பேருக்கும் தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் 50 ஆயிரம் ரூபாயும் என மொத்தம் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவி வழங்கிடவும் முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.**

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9